Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-IV

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி-11 | 25-06-2004 | வெள்ளிக்கிழமை | ஓசை -128

படச்சுருள்கள் அனைத்தையும் கனினி
தொழில் நுட்பத்தில் ஒருமணி
நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள
பொற்காலம் வண்ணக் கலையகம்
MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கனினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள்
படம் பிறேம்செய்தல்,
அனைத்திற்கும் பொற்காலம்
வண்ணக்கலையகம்,
யாழ் சாலை,
கிளிநொச்சி.
R.V
பந்தல் சேவை,
தர்மபுரம்.
(சி-9813)

# கருணாவிற்கு சிறிலங்கா இராணுவம் ஆதரவு வழங்கியமை உண்மையே!

## அமைச்சர் மங்கள சமரவீர ஒப்புதல்

(கொழும்பு)

**கருணா மட்டக்களப்பில் இருந்து தப்பியோடுவதற்கும், கொழும்பில் அவருக்குப் பாதுகாப்பு வழங்கிய சம்பவத்துடனும் இராணுவம் சம்பந்தப்பட்டிருப்பதாக சிறிலங்கா தகவல்துறை அமைச்சர் மங்கள சமரவீர ஒப்புக்கொண்டுள்ளார்.**

மேலும் அவர், கொழும்பிற்குக் கருணா தப்பிவர சில பாதுகாப் பதிகாரிகள் பாதுகாப்புக் கொடுத்ததாகவும், விடுதலைப்புலிகள் கொலை செய்யப்படுவதற்கு உதவியதாகவும் தெரிவித்துள்ளார்.

நேற்று பி.பி.சி. க்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்விவகாரத்தை ஒத்துக்கொண்டுள்ள மங்கள சமரவீர சமாதானத்தில் நாட்டமில்லாத இராணுவத்தின் ஒரு பிரிவே இவ்வாறு செயற்பட்டிருக்கலாம் எனவும், ஆனால் இது குறித்த விடயம் தற்போதைய அரசிற்குத் தெரியாமலே இடம்பெற்றது எனவும் தெரிவித்துள்ளார்.

இதுவரை கருணா பற்றிய எந்த

(IVபக்கம் பார்க்க)

## கொழும்பில் இருவர் பலி

கொழும்பு புறக்கோட்டை யில் நேற்று கட்டடம் ஒன்று இடிந்து விழுந்ததில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் எட்டுப்பேர் படுகாய மடைந்துள்ளனர். அருகில் இருந்த இரு கடைகளும் சேதமடைந்துள்ளன. அனுமதி பெறாது கட்டப்பட்டிருந்த கட்டடமே நேற்று இடிந்து வீழ்ந்துள்ளது.

## தமிழ்ச்செல்வன்- டொன்புறுவ்கொவ்டே திங்கட்கிழமை கிளி. இல் சந்திப்பர்

### எரிக் சூல்கெய்மும் வருகிறார்

(அலுவலக செய்தியாளர்)

இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் டொன்புறுவ் கொவ்டே அவர்களுக்கும் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களுக்கும் இடையிலான சந்திப்பு வரும் 28ஆம் திகதி கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது. கிளிநொச்சியில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் சமாதானச்செயலகத்தில் காலை 10.30 மணிக்கு மேற்படி சந்திப்பு நடைபெறவுள்ளது.

இச்சந்திப்பில் போர் நிறுத்த உடன்பாடு, மட்டக்களப்பு விவகாரம் உள்ளிட்ட, பல்வேறு விடயங்கள்

(IVபக்கம் பார்க்க)

## கருணாவின் விவகாரம் குறித்து பாதுகாப்புச் செயலர் குழப்பம்!

### முன்னுக்குப்பின் முரணான பேச்சு

(கொழும்பு)

கருணாவிற்கு சிறிலங்கா இராணுவம் பாதுகாப்பு அளித்த விவகாரத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் முன்னுக்குப் பின் முரணாகப் பேசுவதை அவதானிக்க முடிகின்றது.

அமைச்சர் மங்கள சமரவீர கருணாவிற்கு சிறிலங்கா பாதுகாப்பு அளித்தது பற்றிய விவகாரம் தொடர்பாக பி.பி.சிக்கு அளித்த பேட்டியிலேயே ஹேரத்தின் முன்னுக்குப் பின் முரணான பேச்சும் தடுமாற்றமும் தெரியவந்தது.

கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த ஹேரத், அமைச்சர்

(IVபக்கம் பார்க்க)

## இந்திய அரசின் அழைப்பையேற்று தொண்டமான் புதுடில்லி விரைவு

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகம் தொண்டாமான் இந்திய அரசாங்கத்தின் அழைப்பையேற்று நேற்றுமுன்தினம் புதுடில்லி விரைந்துள்ளார்.

தென்னிலங்கையின் தற்போதைய நிலவரம் குறித்தும், அரசாங்கத்தைப் பலப்படுத்துவது பற்றியும் புதுடில்லி அதிகாரிகளுடன் இவர் பேச்சு நடத்தவுள்ளதாக இ.தொ.கா. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்திய அரசாங்கத்தின் பாதுகாப்பு

(IVபக்கம் பார்க்க)

## ரவி கருணாநாயக்க விவகாரம் குறித்து பொலிஸ் அதிகாரிக்கெதிராக வழக்கு

நீதிமன்றத்தின் அனுமதி இல்லாத போதும் நீதிமன்றின் அனுமதி இருப்பதாகக் கூறி ஐ.தே கட்சியின் முக்கியஸ்த்தரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவிகருணாநாயக்கவை அவரது வீட்டில் வைத்துக் கைதுசெய்ய முற்பட்ட கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸ் அதிகாரிக்கெதிராக நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.இத்தகவலை கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார். அத்துடன் சட்ட விரோதமாக கைது செய்ய

(IVபக்கம் பார்க்க)

## யாழ். இல் "கலோரஸ்" நிறுவனத்தின் மீது இனந்தெரியாத குழுவினர் தாக்குதல்

### 7 வாகனங்கள் முற்றாக எரிந்தது, 14 சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் வெடி பொருட்களை அகற்றும் பணியில் ஈடுபட்டு வரும் "கலோரஸ்" நிறுவனத்தின் முகாமினுள் அத்துமீறி நுழைந்த இனம்தெரியாத கும்பல் ஒன்று நடத்திய திடீர்த் தாக்குதலில் இருவர் காயமடைந்திருப்பதுடன் அம்முகாமில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த 21 வாகனங்கள் அடித்து நொருக்கி தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை வேளை, யாழ். நல்லூர் செட்டிதெருப் பகுதியில் உள்ள "கலோரஸ்" வெடி பொருள் அகற்றும் நிறுவன [illegible] இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி

(IVபக்கம் பார்க்க)



## யுத்தநிறுத்தமும், சமாதானமும் நீடிக்குமா? மக்கள் மனங்களில் பலமான கேள்வி இது!

### அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் தங்கன்

(முல்லைத்தீவு)

மக்கள் எதிர்பார்த்த சமாதானமும், இந்த யுத்தநிறுத்தமும், பேச்சுவார்த்தைகளும் தொடர்ந்து செல்லுமா என்ற அச்சத்தையும், கேள்விக்குறியையும் எங்கள் மக்களின் உள்ளத்திலே ஏற்படுத்தியிருக்கின்ற காலகட்டமாக எங்கள் சமாதானப் பேச்சுவார்த்தைகள் அமைந்திருக்கின்றன.

இவ்வாறு நேற்று அளம்பிலில் நடைபெற்ற தியாக தீபம் திலீபன் மருத்துவமனையின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவில் உரையாற்றும் போது தமிழீழ அரசியல் துறைத்துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.அவர் மேலும் கூறுகையில் இன்று இரண்டரை வருடகாலமாக தொடர்ந்து சென்று கொண்டிருக்கும் இந்த சமாதான பேச்சுக்கள் எந்தக்காலப்பகுதியில் நிறைவு

(IVபக்கம் பார்க்க)

கண்ணிவெடி விழிப்புணர்வு வாரம்

விழிப்புடன் இருப்போம் விபத்திணைத் தடுப்போம்

யுனிசெவ் வெண்புறா - வன்னி

கி.9728

## வரிவிளம்பரம்

**(இறப்பர்முத்திரை)**

கிளிநொச்சியில் பொலிமர் றபர் ஸ்டாம் உடனுக்குடன் செய்து கொள் ளவும் போட்டோ கொப்பி லேமனட்டிங் போன்றவைகளையும் உடனுக்குடன் செய்துகொள்ள. பிள்ளையார் பொத்தகசாலை, கண்டிவீதி, கிளிநொச்சி(T.P 0212285750) (சி-9823)

## தவறிவிட்டது

இம்மாஸ் நகர் அக்கராயனைச் சேர்ந்த நடராசா பிரசன்னா என்பவருடைய தேசிய அடையாள அட்டையுடன் கைப்பேஸ் வேறு சில ஆவணங்களுடன் ஸ்கந்தபுரம் நகர்ப் பகுதியில் தவறிவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் ஸ்கந்தபுரம் தொலைத் தொடர்பு நிலையத்தில் கொடுத்துவுமாறு கேட்டுக்கொள்கின் றேன்.சன்மானம் வழங்கப்படும் தகவல ந.பிரசன்னா. (4745)


## கொடுப்பனவு வழங்கப்படவில்லை

உலக உணவுத்திட்டத்தின் கீழ் கால் நடை ஶைவத்திய நிலையங்களில் தொண்டர்களாகப் பணிபுரிவோருக்கு கடந்த முதலாம் மாதம் தொடக்கம் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. மேற்படி இத்திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு கால்நடை வைத்தியர் பிரிவில் இருவரும், ஒட்டுசுட்டான் கால்நடை வைத்தியர் பிரிவில் இருவரும் தொண்டர்களாகப் பணிபுரிகின்றனர். இவர்களுக்கு 2004ஆம் ஆண்டு தைமாதம் தொடக்கம் கொடுபனவுகள் வழங்கப் படாததால் இவர்கள் பெரும் கஷ்டங்களை எதிர் நோக்குகின்றனர். இவர்கள் உரியவர்களுடன் பல முறை தொடர்பு கொண்டும் இது வரை பலனளிக்கவில்லை எனத் தெரிவித்துள்ளனர். (05)

# ஐ.ம.சு முன்னணி பாராளுமன்றத்தை கூட்ட முடியாத நிலையிலுள்ளது

## ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவர்

(கொழும்பு)

தற்சமயம் பாராளுமன்றம் கூட முடியாயதுள்ளமை சனநாயகத்திற்கு ஏற்பட்டுள்ள பெரும் அச்சுறுத்தலாகுமென ஜக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவரான கருஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் ஒரு மாதத்தில் குறைந்தது 10 தடவைகளாவது பாராளுமன்றம் கூட்டப்பட வேண்டும். இது அவசியமானதும் கூட ஆனால் ஜக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமையிலான அரசாங்கத்தால் பாராளுமன்றத்தைக் கூட்ட முடியாதுள்ளது. பாராளுமன்றத்தைக் கூட்ட அது அச்சம் கொண்டுள்ளது. பாராளுமன்றத்தைக் கூட்ட வேண்டியது மக்களது பிரச்சினைகளை ஆராயவே எனத் தெரிவித்த கருஜெயசூரிய அத்துடன் எமது ஐ.தே.முன்னணிக்குள் பல இன. மத மொழிகளைக் கொண்ட உறுப்பினர்கள் அங்கம் வகிப்பினும் ஒரே கொள்கையுடையவர்களாக உள்ளனர். அவர்கள் அனைவரினதும் பொறுப்பு சனநாயகத்தைப் பேணுவதே. பாராளுமன்ற நடவடிக்கைகளைப் பாதுகாத்தல் எம்.பிக்களின் பேச்சுச் சுதந்திரத்தைப் பேணுதல் போன்றவையே கட்சியின் நோக்கமாகும். பொதுவான எதிர்க்கட்சி பெரும்பான்மையானவர்களால் உருவான ஒன்றாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த 21ஆம் திகதி எமது ஜக்கிய தேசியக் கட்சிக்கு 114 எம். பிக்களின் ஆதரவு கிடைத்திருப்பதை உறுதிப்படுத்தும் பத்திரத்தை சபாநாயக சூரியிடம் கையளித்த பின்னர் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

## நகரசபைத் தலைவர்களுக்கும் சிறிலங்கா பொலீஸ் பாதுகாப்பு

சிறிலங்காவிலுள்ள அனைத்து நகரசபைத் தலைவர்களுக்கும் பாதுகாப்பு வழங்க சிறிலங்கா பொலிஸ திணைக்களம் முடிவெடுத்துள்ளது.இதன்படி நகரசபைத் தலைவர்களுக்கு தலா 2 பொலிசாரைப் பாதுகாப்பில் ஈடுபடுத்த இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. நகராதிபதிகள் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கவே இந்த நடைமுறை அமுற்படுத்தப்பட்டுள்ளது.

## சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது

கடந்த 4 நாட்களுக்கு முன் செட்டிபாளையம் கடற்கரையில் கரையொதுங்கிய சடலம் களுதா வளையைச் சேர்ந்த பத்மநாதன் மகேஸ்வரனுடையது என அடையாளம் காணப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. சடலம் உருக்குலைந்த நிலையில் இருந்த போதும் இடுப்பில் அணிந்திருந்த நூல், காற்சட்டை போன்றவற்றின் மூலம் சடலத்தை இறந்தவரின் தாயாரும் தங்கையும் அடையாளம் கண்டுள்ளனர்.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பூவுலகில் பூவாய் 16 . 03 . 1983

விண்ணுலகில் சோதியாய் 07 . 07 . 2003

**நாகராசா-சுபாஸ்கரன்**

**(திதி-சப்தம் 25.06.2004)**

*அன்பின் திருவுருவாய், அறிவின் ஒளிவிளக்காய், பண்பின் சிகரமாய், சவால்களுக்கு சரித்திர நாயகனாய், எமக்கெல்லாம் நல்வழி காட்டிய அன்புத்தெய்வமே! கனவுகள் நிறைந்தபூவே! ஏனடா நீ வாடமுன் உதிர்ந்தாய்? நீ எம்மைவிட்டுப்பிரிந்து ஆண்டொன்று சென்றாலும் உன் நினைவுகளை எங்கள் நெஞ்சம் மறக்குமா? நீ இவ்வுலகைவிட்டு மறைந்தாலும் எங்களுக்குள்ளே நீங்காத அலையாய் வாழ்ந்து கொண்டிருக்கின்றாய். உனது ஆத்மா சாந்தியடைய இறைவனைத் தினமும் பிரார்த்திக்கின்றோம்.*

துயரம் நிறைந்த நினைவுகளுடன்
அன்பு, அப்பா, அண்ணண்மார், தங்கைமார்
கலவெட்டித்திடல்- புளியம்பொக்கணை

(4745)

## பகிரங்க ஏலவிற்பனை

கரைதுறைப்பற்று பல நோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் அரிசியாலையில் இயக்கிய(பேக்கிசன் 135) உழவு இயந்திர உதிரிப்பாகம் கழட்டிய நிலையில் பகிரங்க ஏலவிற்பனை தண்ணீருற்று தலைமைக் காரியாலயத்தில் 10.07.2004ஆம் திகதி காலை 10.00 மணியளவில் மேற்கொள்ளப்படவிருப்பதனால் அன்றைய தினம் ஏலவிற்பனையில் பங்கு கொள்வோர். தவறாது சமுகமளிக்குமாறு தங்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

மீளளிக்கப்படாத கேள்வி வைப்புத் தொகை ரூபா 500\=செலுத்தல் வேண்டும்.

குறிப்பு:- உழவு இயந்திரத்தைப் பார்வையிட விரும்புவோர் தண்ணீரூற்று சங்க தலைமைக்காரியாலயத்தில் கடமை நேரத்தில் பார்வையிடலாம்.

(சி-9736) **பொதுமுகாமையாளர்.**

## சாவு அறிவித்தல்

### ஞானமூர்த்தி ஐயாத்தம்பி

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திரு.ஞானமூர்த்தி ஐயாத்தம்பி அவர்கள் 22.06.2004 அன்று சிவபதம் எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற வள்ளிமுத்து அவர்களின் அன்புக்கணவரும், புவனேஸ்வரி, யோகேஸ்வரி (ஆசிரியை, வீரசிங்கம் மகாவித்தியாலயம்), செல்வராசா(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வைரமுத்து (நீர்ப்பாசன இலாகா), ஞானேஸ்வரன்(கிராமசேவை அலுவலர் பரமன் கிராய், பூநகரி), சுப்புலட்சுமி(பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற இராசசிங்கம், ஆச்சிமுத்து, பொன்னுத்துரை, நல்லையா மற்றும் குமாரசாமி (கிராம அலுவலர் சாவகச்சேரி), ஏகாம்பரம்(விவசாய போதனாசிரியர், உசன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், அசோகன் (லண்டன்), புஸ்பலதா (லணடன்), புஸ்பராசன் (லண்டன்), புஸ்பரஜனி, புஸ்பகாந்தன், அனோஜா, வானுஜா, மதுரங்கன், நிறோஜா, நிவேதன், நிருஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும், பிரீதா, லதுன் ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்துசமய முறைப்படி மீசாலை வடக்கிலுள்ள அன்னாரின் இல்லத்தில் 26.06.2004 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித் தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

தகவல்
மருமகன் க.ஞானேஸ்வரன்
(கிராமசேவகர்)
மீசாலை வடக்கு,
மீசாலை.

(4743)

## யாழ். மண்ணில் மாபெரும்

## கண்டிய நடனம்

இலங்கையின் தேசிய நடனமான கண்டிய நடனம் யாழ். மண்ணில் உலகப்புகழ் வாய்ந்த கண்டிய நடனக் கலைஞர்களால் ஒவ்வொரு நடனத்திற்குமான தனித்தனி விளக்கங்கள் தமிழில் விளக்கப்படுத்தி நடைபெறவுள்ளது. இக்கண்டிய நடன நிகழ்ச்சியின் நடன அம்சங்களாக,



01. மங்கள வாத்தியத்துடன் நடனம்
02. பூஜா நடனம்
03. மயில் நடனம்
04. உடக்கி என்று அழைக்கப்படும் சாஸ்திரிய நடனம்
05. முகமூடி நடனம்
06. யக்க நடனம் என்று அழைக்கப்படும் நகைச்சுவை நாட்டிய நாடகம்
07. கஜகாவண்ண நடனம்
08. ரபான் நடனம்
09. கோலாட்டம்
10. தமிழ் நடனப்பாடலுக்கு அபிநயம்
11. பந்தேரு நடனம்
12. பெண்கள் தீயுடன் ஆடும் நடனம்
13. கிராமத்து நடனம்
14. செம்பு நடனம்
15. அஸ்னே நடனம்
16. சதா பாலிய நடனம்



**இந்த நடனங்களுடன் இன்னும் பல கண்டிய நடனங்களும் நடைபெறவுள்ளன.**

இடம்: யாழ். வீரசிங்கம் மண்டபம்
காலம்: 2004~06~27 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பி.ப. 1.00 மணி

**நுழைவுச் சீட்டுக்களை மண்டபவாயிலில் பெற்றுக்கொள்ளலாம்**

அனுமதிக்கு முந்துங்கள்:

*அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்*

**T. K. ரூறிஸ்ற் இன்**

இல. 200, அரசடி வீதி, பலாலி வீதி
அருகில், கந்தர்மடம் சந்தி,
யாழ்ப்பாணம்.


**தொலைபேசி இல. 021 222 5680**

(சி:10105)

# கண்ணிவெடி விழிப்புணர்வு வாரம்

## ஐந்தாம் நாள்


### வன்னியில் நாம் காணக்கூடிய அறிவிப்புப் பலகைகளும் எச்சரிக்கைக் குறியீடுகளும்















**அறிவிப்புப் பலகைகளையும் எச்சரிக்கைக் குறியீடுகளையும் அவதானித்து நடப்போம்.**
**அவற்றை அகற்றுவதையும் அழிப்பதையும் தவிர்ப்போம், தடுப்போம்.**

(சீ 1863)

**யுனிசெப் வெண்புறா-வன்னி**

# ஒரே நேரம் ஐந்து நகரங்களில் தாக்குதல்

# ஈராக்கில் 75 பேர் பலி; 250 பேர் காயம்

(பாக்தாத்)

ஈராக்கின் ஐந்து முக்கிய நகரங்களில் ஒரே நேரத்தில் இடம்பெற்ற கார்க்குண்டுத் தாக்குதலில் அமெரிக்காவின் இராணுவத்தினர் உட்பட எழுபத்தைந்து பேர் உயிரிழந்ததுடன் இருநூற்றி ஐம்பதிற்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

வட ஈராக்கிய நகரமான மொசூலில் நடைபெற்ற கார்க்குண்டுத் தாக்குதலின் போது 44 பேர் கொல்லப்பட்டதுடன் 216 பேர் காயமடைந்துள்ளனர். அதேவேளை பலூஜா மற்றும் சமாபியா ஆகிய நகரங்களில் இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்புச் சம்பவகளில் ஒன்பது பேர் கொல்லப்பட்டதுடன் 27 பேர் காயமடைந்துள்ளனர்.

பப்பியோவாப் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 13 பேர் கொல்லப்பட்டதுடன் 15 பேர் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை பாக்தாத்தில் நடந்த கார்க்குண்டு வெடிப்பில் 9 பேர் உயிரிழந்துள்ளனர்.பலர் காயமடைந்துள்ளனர்.

## தமிழ்ச்செல்வன்..

தொடர்பாக ஆராயப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இலங்கைக்கான நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் எதிர்வரும் திங்கட் கிழமை இலங்கை வரவுள்ளார்.

இவ் வருகையின் போது தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளையும், சிறிலங்கா அரசினையும் சந்திக்கவுள்ள எரிக்சூல் ஹெய்ம் தடைப்பட்டுள்ள சமாதான முன்னெடுப்புக்கள் குறித்து ஆராய்வாரென்றும், நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசனின் இந்தியாவிற்கான பயணம் குறித்து விளக்குவாரென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (லோ)

## யாழ்...

மேலும் தெரிய வருவதாவது, சம்பவநேரம் மேற்படி முகாம் வாயிலில காவல் கடமையில் இருந்த இரு பாதுகாப்புச் சேவை ஊழியர்களைத் தாக்கிக் காயப்படுத்திவிட்டு முகாமினுள் அத்துமீறி நுழைந்த சுமார் 25 பேர் கொண்ட முகமூடிக் கும்பல் ஒன்று நடத்திய திடீர்த் தாக்குதலிலேயே அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்கள் 21உம் சேதமாக்கப்பட்டிருந்ததாக "கலோரஸ்" நிறுவன அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். ஏழு வாகனங்கள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன. மூன்று அம்புலன்ஸ், மூன்று டிப்பர், ஒரு மின்பிறப்பாக்கி காவி வாகனம் என்பனவே எரிந்துள்ளன. ஏனையவை சேதமடைந்துள்ளன. (33,27)

## ரவி...

முயற்சித்தமை குறித்து கட்சி நேற்று தேசிய பொலிஸ் ஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளது.

கட்சியின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர்களை ராஜித சேனாரட்ண, ஜீ.எல். பீரிஸ் ஆகியோரே இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளனர். எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இது குறித்து மேலும் தெரிவிக்கையில், பொலிஸ்மா அதிபருக்கு இது தெரியாது என்று கூறுகிறார். அப்படியென்றால் இந்த அரசாங்கத்திற்குள் வேறொரு அரசாங்கம் இருக்கின்றது.

பிரதமர், அமைச்சர்கள், செயலாளர்கள், பொலிஸ்மா அதிபர், இவர்களுக்கு மேலாக செயற்படும் அரசாங்கம் ஒன்று உள்ளது என்பதே உண்மையாகும்.

பிரதி அமைச்சர்கள் கூறுவது பிரதமருக்குத் தெரியாது. விளையாட்டு பிரதி அமைச்சர் கூறுவது பொலிசுக்குப் பொறுப்பான அமைச்சருக்குத் தெரியாது அப்படியாயின் சனாதிபதி நியமிக்கும் உறுப்பினர்களும், ஜே.வி.பி உறுப்பினர்களுமே இந்த அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்கின்றனர்.

பொலிஸ் அதிகாரி தம்மிடம் பிடிவிறாந்து இருப்பதாகக் கூறினார். ஆனால் அதனைக் காட்டவில்லை. நீதிமன்றம் அவ்வாறான பிடிவிறாந்தைப் பிறப்பிக்க வில்லையெனக் கூறுகின்றது.

நீதிமன்றத்தை அவமதித்ததற்காக நாங்கள் அந்தப் பொலிஸ் அதிகாரி மீது நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தொடுத்தோம். அதேபோன்று ரவிகருண நாயக்காவின் மனித உரிமைகள் மீறப்பட்டது தொடர்பாக நாமும் பொலிஸ் அதிகாரிக்கு எதிராக நீதிமன்றத்திற்குச் சொல்வோம் என்றார்.

## கருணாவிற்கு...

விவகாரத்திலும் தாங்கள் தலையிடவில்லையென சிறிலங்கா அரசு சாதித்து வந்தது. குறிப்பாக, சிறிலங்காவின் பாதுகாப்புச் செயலர் சிறில் கேரத் இவ்விவகாரத்தை முற்றாக மறுத்ததுடன் சிறிலங்கா அரசாங்கம் கருணாவிற்கு உதவியது என்ற சந்தேகம் இருந்தால் விடுதலைப்புலிகள் அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் கடந்த திங்கட்கிழமை காட்டமாகத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிறிலங்காவின் இராணுவம் மாத்திரமல்லாமல் இவ்விவகாரத்தில் அதன் அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா மற்றும் புலனாய்வுத் துறையின் இயக்குனர் கபில கந்தவிதான ஆகியோரின் பங்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில்,மேலும் பல முக்கியஸ்தர்கள் இவ்விவகாரத்தில் ஈடுபட்டிருக்கலாம் எனவும் அவர்களினைக் காக்கும் ஒரு முயற்சியாகவே அமைச்சர் மங்கள சமரவீர இவ்விவகாரத்தை ஒத்துக் கொண்டிருக்கலாம் எனவும் தெரியவருகிறது.

இதேவேளை கருணா விவகாரத்தில் சிறிலங்காப் படையினரின் தொடர்பு என்பது அரசின் ஒப்புதலோடு நடந்ததாக நான் ஒருபோதும் கூறவில்லையென மங்கள சமரவீரவின் அலுவலகம் விடுத்துள்ளஅறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இவ் விவகாரத்தில் இராணுவத்திலுள்ள சில தனி நபர்கள் சம்பந்தப்பட்டடுள்ள வாய்ப்புக்கள் பற்றியே அரசு இப்போது விசாரித்து வருகிறதென அமைச்சர் வலியுறுத்துவதாக அவ் அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது

## யுத்த....

செய்யப்ப[illegible] அச்சங்கள் தென்னிலங்கையிலே இன்று தோன்றித்தோன்றி மறைகின்றன. இனி சிங்கள பேரினவாதசக்திகள் தமிழ் மக்களுக்கான சுதந்திரத்தை என்றும் தரமாட்டடார்கள் என்கின்ற உண்மை நிலையை அறிந்து கொண்ட உள்ளங்களே எங்கள் தாயகப் பகுதியில் வாழ்கின்ற மக்கள், இவர்கள் நீண்டகாலப் பெரும் யுத்தத்தில் அனுபவித்த துயரங்கள் சொல்லில் அடங்காத பெரும் கொடூரங்கள், சொத்துக்களை இழந்ததும், உறவுகளை இழந்ததும், தமதுவீடுகள் அனைத்தையும் இழந்து பல்இடம்பெயர்வுகளையும் சந்தித்தும் அன்றைய கொடிய யுத்தத்தால் ஏற்படுத்தப்பட்ட சின்னங்களாக இன்றும் எங்களுக்கு அதனை நினைவுபடுத்திக் கொண்டிருக்கின்றன.

கிடைத்த இச்சமாதானத்தின் மூலம் எங்கள் மக்களுக்கு ஓர் நல்ல தீர்வினை ஏற்படுத்த வேண்டுமென்கின்ற எண்ணத்தோடு நாம் ஏற்படுத்திக் கொண்ட இந்த சமாதான உடன்படிக்கையை சிங்கள பேரினவாதசக்திகள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்த எண்ணி இன்று பல இன்னல்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற இவ்வேளையில் நாங்கள் மிகுந்த விழிப்புணர்வோடு செயற்பட வேண்டிய நேரம் நெருங்கியிருக்கின்றது நாம் உங்களிடத்தில் கூறி வைக்க விரும்புகின்றோம் என்றுமே எமது மக்களுக்கென்ற உறுதியான சுதந்திரத்தை எந்த சிங்கள தீவிரவாத சக்திகளும் இலகுவில் தந்து விடமாட்டார்கள் என்பதை நீங்கள் நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும். பலஆண்டு காலமாக மாறிமாறி வந்த அரசாங்கங்கள் எமது தேசத்தினையும், எமது மக்களையும் சிதைத்து வரலாறுகளையே படைத்திருக்கின்றது. எனவே நாம் எல்லோரும் இந்த காலகட்டத்தில் ஒன்றிணைந்து ஒரு பலமான சக்தியாக மீண்டும் மீண்டும் எழவேண்டும். நாங்கள் ஒன்றிணைந்த ஒருபெரும் பலமான சக்தி என்பதனை இந்த சர்வதேச சமூகத்திற்கு நாங்கள் மீண் மீண்டும் எடுத்துரைக்க வேண்டும். அப்போது தான் சமாதானத்தையோ அல்லது எந்தத் தீர்வையோ நாங்கள் எட்டமுடியும்.

எனவே நாங்கள் ஒருபலம் மிக்க சக்கியாக இருந்து கொண்டு அந்தப் பலத்தின் மூலம் நாங்கள் எட்ட வேண்டிய தீர்வினை எட்ட ஒருமித்து ஒரு பலமாக நிற்க எல்லோரும் இணைந்து செயற்படவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். எனக் குறிப்பிட்டார். (ச.தீ,20)

## கருணாவின்....

மங்கள சமரவீர கூறியதை அவரிடமே கேட்க வேண்டும் எனக் கூறியதோடு, தனக்கு அவர் பேசியது பற்றி எதுவும் தெரியாது என முதலில் தெரிவித்த அவர் பின்னர் இது தொடர்பாக அமைச்சருடன் பேசியதாகவும், அமைச்சர் தனது பேச்சு குறித்துத் தெரிவித்ததாக சில கருத்துக்களையும் தெரிவித்தார்.

பி.பி.ஸிக்கு ஹேரத் அளித்த பேட்டியில்,

**கேள்வி:** கருணா பற்றிய சம்பவத்தில் சிறிலங்கா இராணுவத்திற்கு தொடர்பு இருந்துள்ளதென ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர கூறியுள்ளார். நீங்கள் என்ன கூறுகிறீர்களென வினாவிய வேளை,

அவர் என்ன கூறினார் என என்னால் கூற இயலாது. அவர் எந்த அடிப்படையில் இதனை கூறினார் என என்னால் கூற இயலாதெனவும் அவர் எந்த ஆதாரத்தை வைத்து அப்படிக் கூறினார் என்பதை நான் அவரிடம் தான் கேட்கவேண்டும் என்றால் அவர் கூறியதைப்பற்றி கருதத்துக்கூற எனக்கு உரிமை இல்லையெனவும் ஆனால் பாதுகாப்பமைச்சின் செயலரான எனக்கு இது சம்பந்தமாக ஒன்றும் தெரியாதெனவும் தெரிவித்தார்.

**கேள்வி:**-மங்களசமரவீர அவர்களை அரசாங்கம் விசாரிக்கலாமென கூறப்படுகிறது. இது பற்றி உங்களுக்குத் தெரியுமா?

இதுவரை எனக்கு அது பற்றித் தெரியாது. இது குறித்து அமைச்சர் நேற்றுத்தான் அறிக்கை கொடுத்துள்ளார். அவர் சில வேளை எங்களது கவனத்திற்கு அதனை கொண்டு வந்து இது குறித்து பரிசீலிக்கச் சொல்லலாம். இதுவரை எனக்கு எவ்வித உத்தரவும் கிடைக்கவில்லை.

**கேள்வி:**-புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்து சென்ற ஒரு தளபதி கொழும்பிற்குற்வருவது அல்லது அவரை வருவிப்பது என்பது இராணுவத்திற்குப் பெருமை சேர்க்கக் கூடிய விடயமாக அமையுமென நினைக்கிறீர்களா எனக் கேட்டபோது

இது வேண்டும் என்றே செய்யப்பட்டதா? அல்லது வேறு மாதிரியாக நடந்ததா? என்பதைப் பொறுத்த விடயம். கொழும்பு அதிகளவான மக்கள் வாழ்கின்ற பிரதேசம். போர் நிறுத்த காலத்திலே இந்நகரிற்குள் வரத் தடைகளோ சோதனைகளோ இல்லை. எனவே உங்களுக்கு முன்னதாகவே இக் குறிப்பிட்ட ஓர் நபர் கொழும்பு நகரிற்குள் கொண்டு வரப்படுகிறார் அல்லது பாதுகாப்புடன்அழைத்து வரப்படுகிறார் என்ற தகவல் இல்லாத வேளை யாரும் இந் நகரிற்குள்ளே நுழைந்து விட முடியும். இது லண்டன், பாரீஸ் என உலகில் எல்லா இடங்களிலும் நடைபெறக் கூடிய விடயமெனத் தெரிவித்தார்.

**கேள்வி:**- இவ் விடயத்தில் இராணுவய் பதிலளிக்க வேண்டியதற்கு எதுவும் இல்லையென நினைக்கிறீர்களா, என கேட்ட வேளை

அரசியல் குழுக்களோ அல்லது தீவிரவாதக்குழுக்களோ இதில் தங்களது நிலைப்பாடுகள் பற்றிப் பேச உரிமையுள்ளது. ஆனால் அமைச்சரிடம் நான் பேசினேன். இது பற்றி என்ன கூறினீர்களெனக் கேட்டேன். அப்போது அவர் கூறினார் தனிப்பட்ட இராணுவ அதிகாரிகள் தங்களது சொந்தத் தனிப்பட்ட உரிமையில் இதில் ஈடுபட்டிருக்கலாம் ஆனால் அரசோ அல்லது அரச படைகளோ இதில் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஈடுபடவில்லையெனக் கூறியதாக கூறினார். ஆனால் இது கூட அவரது கருத்து. நான் அதை எதிர்க்கவும் இல்லை. ஆதரிக்கவும் இல்லை என்றார்.

**கேள்வி:**- தனிப்பட்ட அதிகாரிகள் இதில் ஈடுபட்டிருப்பதாகத் தகவல் கிடைத்தது குறித்து நீங்கள் விசாரித்து நடவடிக்கை எடுப்பீர்களா? என வினாவிய வேளை

அந்த அதிகாரிகள் யார் என்பதை நாங்கள் கண்டுபிடிக்க வேண்டும். அவ்வாறு கண்டுபிடித்து அவர்கள் மீது ஏதாயினும் புகார் வந்தால் அப்புகார் மீது விசாரிக்கலாமெனத் தெரிவித்தார்.

## இந்திய ...

ஆலோசகர் டிக்ஷிற்றையும் இவர் சந்தித்து இலங்கையின் இன்றைய நிலை குறித்து கலந்துரையாடவுள்ளார். இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மக்களின் நலன்கள் தொடர்பாகவும், இந்தியாவின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வது குறித்தும் இவர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். இவரது விஜயம் தென்னிலங்கை அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்தலாமென எதிர்பார்க்கப்படுகிறது.






இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம்* பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.